கருணை அடிப்படையில் வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்து இருந்த 394 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கியிருக்கிறார்கள். உண்மையில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பணியில் இருக்கிறபோது தன்னுடைய தந்தை, தாயை இழந்து 10, 15 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வாரிசுகள் வேலை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பில் அலைந்து கொண்டிருந்தார்கள்.

கடந்த ஆட்சியின்போது. நானும், மறைந்த எங்களுடைய அருமைத் தலைவர் திரு. என். வரதராஜன் அவர்களும் அப்போது முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அவர்களைச் சந்தித்து அந்த வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று மனு கொடுத்தோம். அந்த மனு திருப்பிப் பார்க்கப்படாமல் கிடப்பிலே போடப்பட்டுவிட்டது. அந்தக் கோரிக்கையை மீண்டும் மூன்று தினங்களுக்கு முன்னர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் அளித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு சீக்கிரம் அந்த மனுக்களைப் பரிசீலனை செய்து, பாதிக்கப்பட்ட வேலையை எதிர்பார்த்திருந்த அந்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் என்று நானேகூட எதிர்பார்க்கவில்லை. அந்த வகையில் மூன்று நாட்களிலே அந்த 394 வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் இன்று பணி நியமன ஆணையை வழங்கியிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் (மார்க்சிஸ்ட்) சார்பாகவும், அந்த 394 குடும்பங்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த பாராட்டுகளை, நன்றியோடு தெரிவித்து அமைகிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்.

***திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரம் மிகுந்த மனமே! ஈகை நிறைந்த குணமே! வீரம் மிகுந்த செயலிலே, வெற்றிகள் குவித்த கரமே! சோதனைகளை வென்று சாதனைகளைப் படைத்து வரும் வரலாறுக்கு வரலாறு

2013 மே 9] [திரு. கே.பி. அன்பழகன்]

படைக்கும் வாழும் வரலாற்றுத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் பொற்பாதங்கள் பணிந்து வணங்குகிறேன். 2012-2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 116 முதல் 129 வரையிலான 14 அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 12-20

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.*

***திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையிலே 110 விதியின்கீழ் நெசவாளர்களுடைய துயர் துடைக்க 210 கோடி ரூபாய் செலவில் 10,000 பசுமை வீடுகளையும், ரூ.3.75 கோடி செலவில் 25,000 கைத்தறி நெசவாளர்களுக்கு மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்களையும், உற்பத்தியையும் வருவாயையும் இரண்டு மடங்காகப் பெருக்குவதற்காக 24 கோடி ரூபாய் மானியத்தில் 6,000 பெடல் தறிகள் வழங்குவதற்கும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே 5 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் பணியாளர்களுக்கு 1-1-2013 முதல் காலமுறை ஊதியம், பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க பஞ்சாயத்திற்கு ஒரு பட்டு விவசாயி எனத் திட்டங்கள் பல தந்து நெசவாளர்களின் தலைவிதியை மாற்றியமைத்த திராவிட வரலாற்றின் நான்காம் அத்தியாயமே! (மேசையைத் தட்டும் ஒலி) புதுப்புது சாதனைகள் புரிந்து புதுமைகள் படைத்து குன்றாத புகழோடு விளங்கும் வெற்றியின் விலாசமே! (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேயத்தைப் பேணிக் காத்திடும் மாசற்ற தலைவியே, அன்னை தெரசாவின் அருள் வடிவே, அவ்வை மூதாட்டியின் அறிவுருவே, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழும் எங்கள் ஆராதனைக்குரிய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வரே! (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதப் பிரதமரே! (மேசையைத் தட்டும் ஒலி) தாயாய், தந்தையாய், குருவாய், எங்களை வழி நடத்திடும் மாட்சிமை பொருந்திய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்குக்*